புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================

# சங்ககாலப் பாணர்களின் வாழ்வியல் நிலை

==================================================

வீ.சூரஜ்,

322PHD242F343TAM,

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை

தூய நெஞ்சக்கல்லூரி(தன்னாட்சி) ,

திருப்பத்தூர

**முன்னுரை**

சங்க காலப் பாணர்கள் பல வகையான சமூகத்தவர்களாக இருந்தார்கள் ஒரு பெரிய சமூகம் முறையை கொண்டவர்கள் இந்த பாண் சமூகத்தினர் சங்ககால இலக்கியத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும் ஆளுமைகளாகவும் இருந்துள்ளார்கள்.இப்பாணர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டுமே தங்களுடைய வாழ்விடமாக கொண்டு வாழாமல் பல்வேறு ஊர்களுக்கு சுற்றி தரியும் சமூகமாக இருந்து வந்தார்கள். தங்களுடைய பாடல்களை வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று இசைத்து வாழ்ந்து வந்தார்கள்

பாணர்களை இரண்டு வகையாகப் பிரிப்பர் சிறுபாணர் பெரும்பாணர் சிறிய யாழை மீட்டுவதால்`சிறுபாணர்' என்றும் பெரிய யாழை மீட்டுவதால் `பெரும்பாணர்' என்றும் அழைக்கப்பட்டார்கள். பாணர்கள் கிராமங்களில் நகரியம் மற்றும் நகரங்களில் கிராமியம் என்ற நோக்கில் கிராம கலாச்சாரத்தை நகரங்களிலும் நகர கலாச்சாரத்தை கிராமங்களிலும் கலைகளாக நிகழ்த்தியுள்ளார்கள். இது ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தை மற்றவர்களுக்கு கொண்டு சேர்க்கும் ஒரு பாலமாக அமைந்தது.` யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மை நோக்கில் வாழ்ந்தவர்கள் பாணர்கள். ஒவ்வொரு திணை குடிகளுக்கும் தேவையான கலைத்தேவைகளைப் பாணர்கள் வழி மூலம் மற்ற திணை குடிகளுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டது

**நிலைகுடி அலைகுடிபாணர்கள்**

நிலைகுடிப் பாணர் என்பவர்கள் தங்களுக்கான ஒரு இடத்தை வாழ்விடமாக அமைத்து அங்கேயே வாழ்ந்து வருபவர்கள் அலைகுடிகள் என்பவர்கள் ஊர் ஊராக சுற்றி நிலை குடிகளுக்கு தேவையான கலைகளை பூர்த்தி செய்பவர்கள். இந்த அலைகுடிகள் நிலைகுடிகளின்வழிவாழ்ந்தவர்களே இந்த அலை குடிகள், இந்த வகையான அலைகுடிகள் தற்போது உள்ள காலத்தில் வரை இருந்து வருகிறார்கள். ஊர் ஊராக சென்று ஆட்டம் நிகழ்த்தியும் பாட்டுப்பாடியும் தங்களின் வாழ்க்கையை வாழ்ந்து வருபவர்கள். கிராமப்புறங்களில் தற்போது இவ்வாறான அலைகுடிகளை நாம் காணலாம் பாணர்கள் தங்களின் கலை சேவையைப் பல திணைகளையும் பல்வேறு நாடுகளையும் அவர்களுடைய பயணம் வழி இணைத்தார்கள்.

பயணம் நாடு சுற்றுதல் ஆகிய இரண்டும் ஆற்றுப்படை இலக்கியத்தில் திரும்பத் திரும்ப இடம்பெறும் மிக இன்றியமையாத கூற்றாகும் பாணர்களின் ஊர் சுற்றும் வழிப்பயணம் பல தேசங்களை கடந்து சென்றதை ஆற்றுப்படை நூல்கள் மட்டுமே கூறவில்லை அகநானூறு பாடல்களும் புறநானூறு பாடல்களும் இலக்கியங்களும் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக பெருமாள் எனப்படும் பெரிய மலை தலைவனிடமும் பாணர்கள் சென்றிருப்பதை நற்றிணை வாயிலாக அறியலாம். பாணர்கள் போலவே கூத்தர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க பல ஊர்களில் இருந்து மக்கள் கூடினார்கள் இவ்வாறான ஊர் ஊராக சுற்றி தெரியும் கலைஞர்களையும் சங்க இலக்கியத்தின் வாயிலாகக் காணலாம்

**பாண் சமூகத்தின் வகைகள்**

1. பாணர்
2. பொருநர்
3. கூத்தர்
4. கோடியர்
5. வயிரியர்
6. கண்ணுளர்
7. இயவர்
8. கிணயர்
9. கடம்பர்
10. அகவுநர்
11. பறையர்

**பாணர்களின் அசைவியக்கங்கள்**

பாணர்கள் ஊர் ஊராக சென்று ஆடி பாடி பிழைக்க வேண்டியவர்கள் என்பதை பொருணராற்றுப்படை நேரடியாகவே கூறியிருக்கிறது

**`சாருகழி வழிநாள் சோறு நசை உறாஅது**

**வேறுபுலம் முன்னிய விறகுஅறி பொருந" (பொருந 2_3)**

இப்பாடல் வழி பாணர்கள் ஓய்மா நாட்டில் உள்ள மன்னனைப் பாடி பரிசில் பெற சென்றதாகவும் கூறுகிறது. இவ்வாறு செல்லும் வழியில் உள்ள இயற்கை வளங்களையும் அந்நாட்டின் பெருமைகளையும் பாடி சென்றனர் பாணர்கள். சில பாணர்கள் அரசர்களிடம் நெருக்கமான உறவு கொண்டிருந்ததையும் கூறுகிறது. சிலருக்குக் கிடைத்த வாய்ப்பு மற்ற பாணவர்களுக்கு கிடைக்கவில்லை. பாணர்கள் எங்கள் அரசரைத் தான் மட்டும் தான் பாட வேண்டும் தான் பாடுவது உன்னை மட்டுமே சேரட்டும் என்று விசுவாசமாக இருந்த பாங்கினைகாண முடிகிறது

**பாணர்களின் சமூக முறை**

பாணர்கள் ஆயர், நாடோடி சமூகத்தினர் ஆகவும் ஆயர் சாரா சமூகத்தினராகவும் இருந்தார்கள். பாணர்கள் ஐவகை நிலங்களிலும் தொழிலுக்கு ஏற்ப அந்தந்த திணைகளில் வாழ்ந்து வந்தார்கள்

[வேட்டையும் கவர்தலும் (பாலை)

வேட்டையும் உணவு சேகரித்தலும் (குறிஞ்சி)

ஆயர் வாழ்வும் காட்டெருப்பு வேளாண்மையும் (முல்லை)

ஆயர் சாரா நாடோயம் (ஐந்திணை)

வேளாண்மை (மருதம்)

பழங்காலத்தில் அனைத்து சமூகங்களையும் சாதி முறையில் அழைக்காமல் குடிகள் என்று அழைத்தார்கள் காலப்போக்கில் அந்தந்த குடிகள் செய்யக்கூடிய தொழில்களைப் பொறுத்து சாதி அடுக்கு முறையானது உருவானது ஒவ்வொரு இனக்குழுவும் சமூகமும் அதற்கான பெயரையும் அடையாளத்தையும் கொண்டிருப்பது அதற்கான தனித்துவத்தைத் காட்டுகிறது பாணர்கள் தாங்கள் இசைக்கக்கூடிய இசைக்கருவிகளை வைத்து தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். பெரும்யாழை மீட்டுபவர்கள் பெரும்பாணர் சிறிய யாழை மீட்டுபவர்கள் சிறுபாணர் என்றும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர் சங்ககால சமூக அசைவியக்கத்தில் ஓரிடத்தில் வாழ்ந்த நிலை குடிகளுக்கும் அலைகுடிகளுக்கும் பல்வேறு வகையான சமூக பொருளாதார கலை உறவுகள் இருந்தன

**கீழ்குடி பாணர்கள் மேல்குடிப்பாணர்கள்**

காலப்போக்கில் பாண் சமூகத்தில் பல்வேறு சமூக குழுக்கள் உருவாகின பாணர்கள் செய்யக்கூடிய தொழில் அடிப்படையில் மேல்குடி கீழ்குடி என்ற படிநிலைகள் தோன்றின பாணர்கள் மீன்பிடிப்பதிலும் வல்லுனர்களாக இருந்தனர் ஆனால் பரதவர் போல இல்லாமல் அடுத்த நிலை மீன் பிடிப்பானவர்களாக இருந்தனர் இவ்வகை பாணர்கள் மீன்பிடி சமூகத்தில் கீழ் நிலையில் இருந்ததால் இவர்களைக் கீழ்குடிப்பாணர்கள் என்று அழைத்தார்கள் இதன் மூலம் பாணர்கள் மீன் பிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்கள் என்பதையும் அறிகிறோம்

**துடி எரியும் புலைய**

**எறிகோல் கொள்ளும் இழிசின (புறம் 287)**

தாங்கள் மீட்டக்கூடிய யாழிற்கு தேவையான நரம்புகளை விலங்கினங்கடமிருந்து பெற்று பிழைத்ததாகவும் கூறப்படுகிறது அது மட்டும் இன்றி விலங்கு தோல்களை பறை செய்வதற்கு பயன்படுத்தியதாகவும் கூறுகிறது இவ்வாறான பாணர்களை புலையர் மற்றும் பறையர் என்று கீழ் சமூகத்தில் இருந்ததாக கூறுகின்றனர்

**மேல்குடி பாணர்கள்**

சங்ககாலத்தில் பாணர்கள் ஒரு தனி சமூகத்தினராக்க காணப்படினும் சிலர் செழிப்புடன் இருந்துள்ளனர் இவர்களை மேல் குடிப்பானர்களாக கருதுகின்றனர் பாணர்கள் பாடுவதில் மட்டும் தங்களின் வாழ்க்கையினை நடத்தி வரவில்லை. ஒரு சில கிராமங்களில் அரசர்களாகவும் ஆட்சி புரிந்து வந்துள்ளார்கள் சில மன்னர்களிடம் நெருங்கி பழகி தங்களுடைய விசுவாசத்தை அவர்களுக்கு மட்டுமே செலுத்தி பெரும் நட்பு உணர்வோடும் இருந்திருக்கின்றனர் சங்ககாலத்தில் முதுகுடியினர் என்னும் சிறப்புடனும் போற்றப்பட்டுள்ளனர் இது அவர்களுடைய சமூகப் தகுதியை காட்டுகிறது

**முடிவுரை**

கலைவாழ்வைக் கொண்ட பாண் சமூகத்தாரின் மரபினை கடனறி மரபு என்று அழைத்தார்கள். கடன் என்பதற்கு கடமை கடப்பாடு என்று பொருள் கடனறி மரபில் காலந்தோறும் செம்மைப்படுத்தும் இயல்பு பாணர்களை மேலும் கலைத்தொழிலில் சிறப்புற செய்தது சங்ககாலத்தில் பாணர்களும் புலவர்களும் கலை மிகுந்த வாழ்வை வாழ்ந்தவர்கள் பாட்டாலும் இசையாலும் கலையாலும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி சிறப்புற தங்களின் வாழ்க்கை நடத்தி வந்தவர்களே இந்தப் பாணர்கள்.பாணர்கள் எல்லாச் சூழலிலும் தனியாக செல்லாமல் தன் குடும்பத்தோடுச் சென்று பாடல் பாடி பரிசுகளைப் பெறுபவர்கள். ஆனால், புலவர்களோ தனியாகச் சென்று பாடலைப் பாடி பரிசுப் பெற்றவர்களாக இருந்தனர் பானர்களை தாமரை மாலை சூடும் பாணர்கள் என்றும் புலவர்களை யானை மீது ஏறி வரும் புலவர்கள் என்றும் போற்றினார்கள் பாணர்களின் கலை வாழ்வானது ஒரு பெரிய குடும்பத்திற்காகவும் அல்லது ஒரு பெரிய கலை குடும்பத்திற்காகவும் இருந்துள்ளது. பாணர்கள்

தங்கள் வாழ்வில் எண்ணற்ற கலைகளையும் நன்மைகளையும் பல்வேறு மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வாழ்ந்துவந்தவர்களாகக்குறிப்பிடப்படுகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. பக்தவச்சல பாரதி,பாணர் இனவரவியல், அடையாள பதிப்பகம்.

2.டாக்டர்ஆ.அ.வரகுணபாண்டியன்,பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்,

பரிசல் வெளியீடு, முதற்பதிப்பு 2023.